**காத்தான்குடி நகர சபை - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

காத்தான்குடி நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 181(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 54(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காத்தான்குடி நகர சபையின் சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதாரத் தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிராகரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பூரணப்படுத்தப்பட்ட ரூபா 13,451,780 பெறுமதியான 12 கொள்கலன் கடைகளின் பெறுமதிகள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | கொள்கலன் கடைகளின் மொத்தப் பெறுமதியினை மூலதனமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை கணக்குகளில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | உள்ளூர் அபிவிருத்தி உதவிச் செயற்றிடத்தின் மூலம் கிடைக்க வேண்டிய ரூபா 199,422 தொகையான மூலதன மானியம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | உள்ளூர் அபிவிருத்தி உதவிச் செயற்றிட்டத்தினூடாக கிடைக்க வேண்டிய மூலதன மானியம் ரூபா 199,422 இனை நிதிக்கூற்றில் சேர்த்துக் கொள்ளப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மூலதன மானியம் நிதிக்கூற்றுக்களில் பெற வேண்டியவை களாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதி வரை சபையினால் வெளிநபர்களுக்குகெதிராக மற்றும் வெளிநபர்களினால் சபைக்கெதிராக தொடுக்கப்பட்ட 04 வழக்குகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வழக்குகள் பற்றிய விபரங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வழக்குகள் நிதிக்கூற்றுக்களில் குறிப்பாகக் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 261,222,755 பெறுமதியான 07 மீதிகளுடன் தொடர்புடைய நிலையான சொத்துப் பதிவேடு, உரிமையை உறுதிப்படுத்தும் பதிவேடுகள், முற்பணப் பதிவேடு மற்றும் ஏனைய பதிவேடுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | காணி உறுதிகளைப் பெறுவதற்கும் இயந்திரங்கள், மோட்டார் வாகனங்கள் மற்றும் தளபாடங்கள் தொடர்பான ஆவணங்களைப் பெறுவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | சொத்துக்களின் ஆவணங்களைப் பெற்று ஆவணப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| (i) | இல. 371(2)(அ) | சபையின் ஊழியர், ஒப்பந்தகாரர்கள் மற்றும் அரச நிறுவனங்களுக்கு சபையினால் வழங்கப்பட்ட ரூபா 10,106,886 முற்பண கொடுப்பனவுகளை இனங்கண்டு அவற்றினை தீர்ப்பனவு செய்வதற்கு 02 மாதம் தொடக்கம் 16 வருடங்களுக்கு மேலாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நீண்ட காலமாக தீர்ப்பனவு செய்யப்படாது உள்ள முற்பணங்களின் விபரங்கள் குழு அமைக்கப்பட்டு ஆராயப்படுவதன் மூலம் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முற்பண கொடுப்பனவுகளை இனங்கண்டு அவற்றினை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | இல. 571(1), (2), (3) | இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 1,110,219 வைப்புக்களை வருமானக் கணக்கிற்கு மாற்றுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நீண்ட கால வைப்புக்களை வருமானக் கணக்கிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படு கின்றது. | காலங்கடந்த வைப்புக்களை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1971 இன் 48 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பான விசேட ஏற்பாடு மற்றும் கிழக்கு மாகாண பிரதம செயலாளரது 2020 யூலை 10 ஆந் திகதியும் EP/01/CMA/Cabinet.Memo/007 இலக்கமும் கொண்ட கடிதம். | ஆதனவரி அறவிடுவதற்காக நகர அதிகார எல்லையிலுள்ள அசையாத ஆதனங்களை 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதீப்பீடு செய்ய வேண்டியிருந்தும் 2014 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட 25,484 எண்ணிக்கையிலான மொத்த அலகுகளினை அடிப்படையாகக் கொண்டு ஆதனவரி அறவீடுகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன. | இவ்விடயம் தொடர்பில் விலைமதிப்பீட்டுத் திணைக்களத்துடன் இணைந்து செயற்பட்டு வருகின்றோம். | அசையாத ஆதனங்களை 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினங்களை மிகைத்த வருமானம் ரூபா 13,148,387 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களை மிகைத்த வருமானம் ரூபா 9,567,389 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான மூலம் | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 22,030,000 | 35,781,669 | 19,355,556 | 16,426,113 | 21,612,000 | 22,371,641 | 20,367,473 | 11,594,381 |
| வாடகை | 10,089,000 | 10,461,725 | 10,081,350 | 380,375 | 12,420,000 | 7,495,627 | 7,287,527 | 208,100 |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 3,920,000 | 4,366,495 | 4,337,935 | 28,560 | 4,060,000 | 4,088,230 | 4,073,780 | 38,000 |
| ஏனைய வருமானம் | 96,553 | 41,092,693 | 40584,868 | 507,825 | 124,804,000 | 100,644,294 | 100,582,287 | 5,614,576 |
| | 36,135,553 | 91,702,582 | 74,359,709 | 17,342,873 | 162,896,000 | 134,599,792 | 132,311,067 | 17,455,057 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி 31 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி கணக்கின் மீதி ரூபா 5,042,645 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 4,657,935 ஆன 25,484 வீதவரி வளவுகளிலிருந்து 02 ஆண்டு முதல் 05 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட மீதியாக காணப்பட்டிருந்தன. | நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. | வீதவரி நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2023 திசெம்பர் 31 இல் கிடைக்க வேண்டியிருந்த முத்திரைக் கட்டணம் ரூபா 14,805,656 ஆகும். | குறித்த முத்திரை தீர்வைக்கட்டணங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முத்திரைத் தீர்வைக் கட்டணங்களைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச்சட்டத்தின் (அத்தியாயம் 623) பிரிவு 3(1) மற்றும் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச்சட்டத்தின் பகுதி II, பிரிவு 16(1) இன் பிரகாரம், குறிப்பிட்ட மாதத்திற்கான பங்களிப்புத் தொகைகள் தொடர்ந்து வரும் மாதத்தின் இறுதித் திகதிக்கு முன் அந்நிதியங்களுக்கு செலுத்த வேண்டும். இதனை தவறும் பட்சத்தில் தாமத தண்டப் பணங்களுடன் சேர்த்து பங்களிப்புத் தொகைகள் செலுத்தப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தும் சபையானது 2021 சனவரி தொடக்கம் மீளாய்வாண்டின் நொவெம்பர் வரையான காலப்பகுதிக்காக அந்நிதியங்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 9,388,517 பங்களிப்புத் தொகையினை உரிய காலப்பகுதிக்குள் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்த வேண்டியதாக உள்ள ஊழியர் பங்களிப்புத் தொகைகள் அந் நிதியத்திற்கு செலுத்துவதற்கான நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. | ஊழிய சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்புத் தொகைகளை உரிய காலப்பகுதிக்குள் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சபையின் சட்ட விடயங்களை கையாளுவதற்கும், அது தொடர்பான ஆலோசனைகளை பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் நீதிமன்றங்களில் சபை சார்பாக தெரிவாவதற்குமென 2018 ஆம் ஆண்டிலிருந்து சட்டத்தரணி ஒருவர் அமர்த்தப்பட்டு அவருக்கு மாதாந்தம் | குறித்த வழக்கு விடயப்பரப்பில் சிறப்பு தேர்ச்சி பெற்ற சட்டத்தரணிகளை கொண்டு கையாளும் போதே சபைக்கு சாதகமான தீர்வினை எய்தமுடியும், என்பதற்காக | முறையான அனுமதியுடனே செலவுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 20,000 கொடுப்பனவாக சபையினால் வழங்கிவருகின்ற போதிலும் 2022 ஆம் ஆண்டில் சபையினால் தொடுக்கப்பட்ட 02 நீதிமன்ற வழக்குகளுக்கு பிறிதொரு பிரத்தியேக சட்டத்தரணி ஒருவர் சபை சார்பாக தெரிவாகி அவருக்கு ரூபா 215,000 கொடுப்பனவும் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பிரத்தியோகமானதொரு சட்டதரணியை தெரிவு செய்யவேண்டியிருந்தது. | |
| (இ) | 05 வருடங்களாக தொடர்ச்சியாக நிதிக்கூற்றில் காட்டப்பட்டுவரும் ரூபா 33,206,837 பெறுமதிகளினைக் கொண்ட 53 வாகனங்கள் மற்றும் 17 ரெயிலர்களின் பெறுமதிகளினை மீளாய்வாண்டின் இறுதி வரை மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நடப்பு ஆண்டில் இவ்விடயத்தை கருத்திற்கொண்டு நிதிக்கூற்று தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வாகனங்கள் மற்றும் ரெயிலர்களின் பெறுமதிகளினை மீள்மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | சபையில் பழுதடைந்த நிலையில் காணப்படும் 11 வாகனங்கள் மற்றும் 06 உழவு இயந்திர இழுவைப் பெட்டிகளினை திருத்தம்செய்து மீளப் பயன்படுத்துவதற்கு அல்லது அவற்றினை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு கடந்த 05 வருட காலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | வாகனங்களை திருத்துவதற்கு அல்லது அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 05 வாகனங்களின் உரிமையினை சுவீகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் உரிமைகளை பெறுவதற்காக வாகனங்களின் விபரங்கள் கொம்ரோலர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளது. | வாகனங்களின் உரிமையினை சுவீகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| **(அ)** | சபையில் பணியாளர்களில் 46 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாமையினால் சபையினால் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் பலவீனமான முறையில் காணப்பட்டிருந்தன. | வெற்றிடம் தொடர்பில் அறவிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(ஆ)** | சபையில் சேவையாற்றி ஓய்வுபெற்ற 03 உத்தியோகத்தர்கள் மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற ஒரு உத்தியோகத்தர் ஆகியோரின் மொத்தக் கடன் நிலுவையான ரூபா 46,792 தொகையினை 05 வருட காலமாக அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஊழியர் கடன் நிலுவைகளை சீர்செய்வதற்கு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஊழியர் கடன் நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |